பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

02 04 2024 6 30

<u>தலைப்புச் செய்திகள்-</u>

1. தமிழகத்திற்கு சிறப்பு தேர்தல் செலவின பார்வையாளராக நியமிக்கப்பட்டுள்ள திரு பாலகிருஷ்ணன், பல்துறை கள அதிகாரிகளுடன் இன்று ஆலோசனை நடத்தினார்.

2. தமிழகத்தில் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அரசியல் தலைவர்கள் இன்று பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

3. நாட்டின் எல்லைப் பகுதிகளின் பாதுகாப்பை முப்படையினரும் உறுதி செய்ய வேண்டுமென்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.

4. தமிழகத்தில் நாடாளுமன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் மீதுள்ள வழக்குகள் மீது விரைந்து முடிவெடுக்க ஒத்துழைப்பு தர வேண்டுமென்று மாநில அரசை சென்னை உயர்நீதிமன்றம் கேட்டுக் கொண்டுள்ளது.

5. ஐ பி எல் கிரிக்கெட் போட்டியின் இன்றைய ஆட்டத்தில் பெங்களூரு அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

*<u>---- இனி விரிவான செய்திகள் ---</u>*

**[]<<<>>>[]**

தமிழ்நாடு, ஆந்திர பிரதேஷ், கர்நாடகா, உத்திரபிரதேஷ், ஒடிஸா ஆகிய மாநிலங்களுக்கு சிறப்பு செலவின பார்வையாளர்களை தேர்தல் ஆணையம் நியமித்துள்ளது.

தேர்தலில் பணபலத்தை தடுக்கவும், அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் தேர்தல் செலவுகளை தீவிரமாக கண்காணிக்கவும் தேவையான நடவடிக்கைகளை இவர்கள் மேற்கொள்ள உள்ளதாகவும் தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

இதற்கிடையே தமிழகத்திற்கு சிறப்பு தேர்தல் செலவின பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டுள்ள ஓய்வுபெற்ற மத்திய வருவாய்த்துறை அதிகாரி திரு பாலகிருஷ்ணன், தமிழக தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்தியபிரதா சாஹு ஆகியோர் தேர்தல் செலவினங்களை கண்காணிப்பது குறித்து இன்று ஆய்வு மேற்கொண்டனர்.

வருமான வரித்துறை, அமலாக்கத்துறை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளின் அதிகாரிகளுடனும் தேர்தல் செலவின கண்காணிப்பு குறித்தும், பணபலத்தை தடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வது குறித்தும் ஆலோசனை நடத்தினர்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாது அரசியல் கட்சித் தலைவர்கள் இன்று தீவிர பிரச்சாரத்தில் ஈடுபட்டனர்.

மாநிலம் முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு தங்கள் கட்சிகளின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

திமுக தலைவரும், முதலமைச்சருமான திரு மு க ஸ்டாலின் இன்று வேலூர் மற்றும் அரக்கோணம் வேட்பாளர்களுக்கு ஆதரவாக வாக்கு சேகரிக்கிறார்.

அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி திருப்பத்தூரில் மக்களைச் சந்தித்து வாக்கு சேகரித்தார்.

தங்கள் கட்சிக்கு வாக்களித்தால் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று தெரிவித்தார்.

கோவை தொகுதியில் தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்ட பிஜேபி மாநில தலைவர் திரு அண்ணாமலை, கச்சத்தீவை மீட்டெடுத்தால்தான் தமிழக மீனவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண முடியும் என்றார்.

கடந்த 2014-ஆம் ஆண்டு உச்சநீதிமன்றம் கச்சத்தீவு குறித்த கருத்தை வெளியிட்டது என்றும், இதனை மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக தாங்கள் இப்போது பேசி வருவதாகவும் அவர் கூறினார்.

கிருஷ்ணகிரி மக்களவைத் தொகுதியில் பிரச்சாரம் மேற்கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்மாநில செயலாளர் திரு முத்தரசன் மக்களின் வாக்குகளைப் பெறுவதற்காக மட்டுமே பிஜேபி கச்சத்தீவு குறித்த பிரச்சினையை எழுப்புவதாகக் கூறினார்.

1974-ஆம் ஆண்டு மாநில அரசைக்கூட கலந்து ஆலோசிக்காமல் கச்சத்தீவு இலங்கைக்கு வழங்கப்பட்டதாகத் தெரிவீத்தார்.

நீலகிரியில் பிரச்சாரம் மேற்கொண்ட பிஜேபி மூத்த தலைவர்களில் ஒருவரான திரு எல் முருகன், நீலகிரி பசுந்தேயிலைக்கு உரிய விலை கிடைப்பதற்கான நடவடிக்கைகளை தமது கட்சி எடுத்ததாகக் கூறினார்.

அப்பகுதியில் விளையும் காய்கறி மற்றும் மலர்களை பதப்படுத்துவதற்கு குளிர்சாதன கிடங்கு செய்து தரப்படும் என்றும், மலைவாழ் மக்களுக்கு மருத்துவ வசதி செய்து தரப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தருமபுரியில் பிரச்சாரம் மேற்கொண்ட தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் திரு செல்வப்பெருந்தகை, கடந்த 2014-ஆம் ஆண்டு தேர்தலில் வெற்றிபெற்ற பிரதமர் திரு நரேந்திரமோடி இதுவரை கருப்புப் பணத்தை மீட்டு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று கூறினார்.

தமிழகத்திற்கான திட்டங்களை பிஜேபி அரசு நிறைவேற்றவில்லை என்றும் அவர் குற்றம்சாட்டினார்.,

கடந்த ஆண்டு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழகத்திற்கு உரிய நிவாரணம் வழங்கப்படவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

[]<<<>>>[]

தேர்தல் தொடர்பான நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகங்களும் முழுவீச்சில் மேற்கொண்டு வருகின்றன.

சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் பயன்படுத்தப்பட உள்ள வாக்குப்பதிவு எந்திரங்களை குலுக்கல் முறையில் தெரிவு செய்வதற்கான பணி அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் முன் இன்று சென்னை மாநகராட்சி அலுவலகததில் நடைபெற்றது.

நாமக்கல் மாவட்டம் ராசிபுரத்தில் இன்று நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆட்சியர் திருமதி உமா அதிக வாக்குப்பதிவு பெற்ற மாவட்டமாக நாமக்கல் திகழும் வகையில் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

தேர்தலின்போது பொதுமக்கள் அச்சமின்றி வாக்களிப்பதை உறுதி செய்யும் வகையில் கோவை மாவட்டம் பொள்ளாச்சியில் பாதுகாப்புப் படையினரின் கொடி அணிவகுப்பு ஊர்வலம் இன்று நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணி இன்று நடைபெற்றது.

திண்டுக்கல் மாவட்டத்தில் 100 சதவீதம் வாக்களிப்பதை வலியுறுத்தி மனிதசங்கிலி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

ஈரோடு மாவட்டத்தில் வாக்குச் சாவடிகளில் மாற்றுத் திறனாளிகளுக்காக அமைக்கப்பட்டு வரும் முன்னேற்பாட்டு பணிகளை தேர்தல் அலுவலர் திரு ராஜகோபல் சுங்கரா இன்று ஆய்வு செய்தார்,

நாகை கடற்படை தளத்திலிருந்து கடலில் படகுமூலம் சென்று மீன்வர்களிடம் தேர்தல் குறித்த விழிப்புணர்வை ஆட்சியரும், தேர்தல் அலுவலருமான திரு ஜானிடாம் வர்க்கீஸ் ஏற்படுத்தினார்.

காஞ்சிபுரம் மாவட்டம் செவிலிமேட்டில் உள்ள மின்னணு வாக்குப்பதிவு எந்திர கிடங்கிலிருந்து புதுக்கோட்டை மற்றும் நாமக்கல் மாவட்டங்களுக்கு தேவையான வாக்குப்பதிவு எந்திரங்களை ஆட்சியர் திருமலை கலைச்செல்வி இன்று அனுப்பி வைத்தார்.

தூத்துக்குடி தொகுதிக்கு உட்பட்ட பகுதிகளில் நடத்திய வாகன சோதனையின்போது 34 லட்சம் ரூபாயை தேர்தல் பறக்கும் படையினர் இன்று பறிமுதல் செய்தனர்.

[]<<<>>>[]

மக்களவை தேர்தலை ஒட்டி பல்வேறு தொகுதிகளைப் பற்றி அறிந்து கொள்ளும் ‘தொகுதி அலசல்’ தொகுப்பில் காஞ்சிபுரம் மக்களவைத் தொகுதி குறித்து எமது செய்தியாளர் தரும் தகவல் . . ..

[]<<<>>>[]

நாட்டின் வடஎல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று என்று பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத்சிங் வலியுறுத்தியுள்ளார்.,

புதுதில்லியில் இன்று ராணுவ தளபதிகள் மாநாட்டில் உரையாற்றிய அவர், எல்லைப் பகுதியில் முப்படைகளும் உறுதியுடன் செயல்பட்டு வருவதாகவும், அமைதிக்கான நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவித்தார்.

மேற்கு எல்லைப்பகுதியில் செயல்பட்டு வரும் ராணுவம் மற்றும் பாதுகாப்புப் படையினரின் பணிகளையும் அமைச்சர் பாராட்டினார்.

தீவிரவாதத்துக்கு முற்றுப்புள்ளி வைக்க பாதுகாப்புப்படையினர் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளுக்கு தேவையான உதவிகளை அரசு நிர்வாக அமைப்புகளின் அதிகாரிகள் செய்துதர வேண்டுமென்று கேட்டுக் கொண்டார்.

ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கண்காணிப்புப் பணிகளினால் அரசு நிர்வாகம் சீராக செயல்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

புதிய தொழில்நுட்பங்களைக் கொண்டுவர ராணுவம் எடுத்து வரும் நடவடிக்கைகளையும் திரு ராஜ்நாத்சிங் பாராட்டினார்.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் **MLA, MP**-க்களுக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகளின் கீழ் 561 வழக்குகளும், ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் 20 வழக்குகளும் உள்ளதாக தமிழக அரசு இன்று சென்னை உயர்நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இவர்கள் தொடர்பாக சிறப்பு நீதிமன்ங்களில் நிலுவையில் உள்ள குற்ற வழக்குகளின் விசாரணையை கண்காணிப்பது தொடர்பாக உச்சநீதிமன்றம் பிறப்பித்த உத்தரவின்படி சென்னை உயர்நீதிமன்றம் தாமாக முன்வந்து வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டது,

தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா மற்றும் நீதிபதி திரு சத்யநாராயண பிரசாத் அமர்வு முன்பு இன்று இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, இது தொடர்பான அறிக்கையை தமிழக அரசு தாக்கல் செய்தது.

இதையடுத்து குற்றச்சாட்டுக்கள் பதிவுக்காக உள்ள வழக்குகளில் விரைந்து குற்றச்சாட்டுக்களை பதிவு செய்,ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், புலன் விசாரணையில் உள்ள வழக்குகளை விரைந்து விசாரித்து முடிவு எடுக்க மாநில அரசு ஒத்துழைப்பு அளிக்க என்றும் உத்தரவிட்ட நீதிபதிகள், வழக்கு விசாரணையை ஜூன் 20-ஆம் தேதிக்கு ஒத்திவைத்தனர்.

**[]<<<>>>[]**

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் பெங்களூரு அணி – லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

பெங்களூருவில் இப்போட்டி இரவு மணி 7-30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

ஐ எஸ் எல் கால்பந்து போட்டியில் ஒடிஷா இன்று பஞ்சாப் அணியை எதிர்கொள்கிறது.

புவனேஸ்வரில் நடைபெறவுள்ள இப்போட்டி இரவு மணி 7.30-க்கு தொடங்குகிறது.

**[]<<<>>>[]**

காஷிபா ஓபன் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா – தைவானின் **chia yi** மஇணை காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டியின் மகளிர் இரட்டையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் இந்த இணை 6-2, 6-1 என்ற செட் கணக்கில் தைவானின் **Yu yun li** - ஹாங்காங்கின் **Hong yi cody wong** இணையை வென்றது.

***End of News***